Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 26, 2024

திங்கட்கிழமை ஆகஸ்ட் 26, 2024 | ஒளி: 10 கதிர் 036 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து
# புதனன்று ஆராய்வு

2023 மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்த வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தமை தொடர்பிலும் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்தும் ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு, எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை கூடவிருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்தாததன் மூலம் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிதியமைச்சின் செயலாளர், ஆகியோரின் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார் என உயர்நீதிமன்றம் வியாழக்கிழமை (22) உத்தரவிட்டிருந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இந்நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு, புதன்கிழமை (28) கூடவுள்ளது.




## 'சாபக்கேட்டுக்கு முடிவு கட்டுவோம்"

இலங்கை நாட்டின் 76 வருட காலமாக நாட்டைப் பீடித்துள்ள பிரபுக்களின் ஆட்சிக்கு முடிவு கட்ட தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

முழுச் செய்தி P2



மூன்று பிரதான வேட்பாளர்களிடமும்

# "சமதூர பேச்சு"

பாராளுமன்றத் தேர்தல் எப்போது நடக்கும் என கூற முடியாது, தற்போது ஜனாதிபதித் தேர்தல் வருகின்றது, இதில் யாருக்கு ஆதரவளிப்பது பற்றி கட்சி இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

முழுச் செய்தி P2



## வசூலிக்கும் வரி குறுஞ்செய்தியில்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படையான முறையில் நியாயமான வரியை வசூலிக்கும், மேலும் ஒவ்வொரு வரி செலுத்துபவருக்கும் செலுத்தப்படும் வரிகள் மற்றும் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்து குறுஞ்செய்தி மூலம் ஒவ்வொரு ஆண்டும் தெரிவிக்கப்படும் என தலைவர் அனுரகுமார திஸாநாயக்க சனிக்கிழமை(24) தெரிவித்தார்.

முழுச் செய்தி P2

## காங்கிரஸின் பிரசாரம் 30ஆம் திகதி ஆரம்பம்

எஸ்.சதீஷ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரம் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முழுச் செய்தி P2

## "துரோகிகளை தண்டிக்கத் தயங்காது"

சமூக வாக்குகளால் பதவிக்கு வந்து, கொடுங்கோல் ஆட்சியாளருக்கு விலைபோன முஸ்லிம் எம்.பிக்களை ஒருபோதும் மன்னிக்க முடியாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில், சனிக்கிழமை (24) நடைபெற்ற கட்சியின் இளைஞர் மாநாட்டில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இம்மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

"சந்தர்ப்பவாத அரசியலுக்கு விலைபோனவர்களை கட்சி ஒருபோதும் மன்னிக்கப்போவதில்லை. எங்களைவிட்டுப் பிரிந்த மூவரையும் துணிச்சலுடன் கட்சியிலிருந்து நீக்கியுள்ளோம். இதேபோன்று, துணிச்சலான முடிவுகளையே ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்க வேண்டும். அப்போதுதான், சமூகத் துரோகிகளுக்கு சிறந்த பாடம்புகட்ட மக்கள் முன்வருவர். துரோகிகளை மன்னிப்பது பின்னர், மீண்டும் கட்சியில் இணைப்பது என்பதெல்லாம் கோமாளித்தன அரசியலாகும். மக்கள் மீது நம்பிக்கையுள்ள தலைமைகள், துரோகிகளை தண்டிப்பதற்கு தயங்கப்போவதில்லை.

முழுச் செய்தி P2

## மன்னார் சிந்துஜாவின் கணவர் உயிர்மாய்ப்பு



க.அகரன்

மன்னார் வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த இளம் தாய் சிந்துஜாவின் கணவரான எஸ்.சுதன் (26 வயது) அவரது சொந்த ஊரான வவுனியா பனிக்கர் புளியங்குளத்தில் தவறான முடிவெடுத்து, சனிக்கிழமை (24) இரவு மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

முழுச் செய்தி P2

## "விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவேன்"

விவசாயிகளுக்கு தேவையான சிறந்த தரத்திலான 50 கிலோ கிராம் எடையுள்ள உரம் மூடை ஒன்றை 5,000 ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விவசாய இரசாயன மருந்துகள், உரம் என்பனவற்றுக்கு ஒழுங்கு முறையான விலை நிர்ணயத்தை மேற்கொண்டு, இருட்டடிப்புச் செய்கின்ற

முழுச் செய்தி P2



## "ஒளிந்து விளையாட இடம் கிடையாது"

சஜித் பிரமதாசவை ஜனாதியாக வெற்றிபெற வைக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் எடுத்த பிற்பாடு அதில் ஒளிந்து விளையாடுவதற்கு யாருக்கும் இடம் கிடையாது என்று ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் பேசுகையில், நாங்கள் சமூகம் சார்ந்த பல காரணங்களை முன்வைத்து சஜித் பிரமதாசாவை ஆதரிக்கின்றோம்.

முழுச் செய்தி P2



## மரணித்த வேட்பாளருக்கு புதியவரை நியமிக்கலாம்

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவிருந்த நிலையில், மரணித்த டொக்டர் ஹைதுருஸ் மொஹம்மட் இலியாஸுக்கு பதிலாக வேறொரு வேட்பாளரை முன்னிறுத்தச் சந்தர்ப்பம் உள்ளதெனத் தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

டொக்டர் ஹைதுருஸ் மொஹம்மட் இலியாஸின் மரணச் சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மூலம் இலியாஸ் சார்பில் வேட்பு மனுவில் கையொப்பமிட்டவருக்கு வேறொரு வேட்பாளரைப் பரிந்துரைக்க முடியும் என ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க கூறியுள்ளார்.

முழுச் செய்தி P2



## ரணிலுக்கே 'சதா' ஆதரவு




ஆ.ரமேஸ்

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆதரிக்கப் போவதாக நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுப்பையா சதாசிவத்தின் தலைமையிலான இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி அதன் நிலைப்பட்டை உத்தியோகப்பூர்வமாக அறிவித்தது.

முழுச் செய்தி P2

## மு.கா. தேசிய பிரசார செயலாளர் இடைநிறுத்தம்

அஸ்லம் எஸ்.மௌலானா

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீட உறுப்பினரும் கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளருமான யூ.எல்.எம்.என். முபீன் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடை நிறுத்த செய்யப்பட்டுள்ளார் என்று கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.

அத்துடன், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான விளக்கம் கோரும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாகவும் செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

முழுச் செய்தி P2



# தமிழக மீனவர்கள் 11 பேர் கைது

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி நாகப்பட்டினம் மீனவர்கள் 11 பேரை இலங்கை கடல் படையினர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் தமிழக மீனவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் மற்றும் புதுவைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவது தொடர்ந்து நடந்து வருகிறது. அத்துடன், மீனவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்து அரசுடைமையாக்கி, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை இலங்கை அழித்து வருகிறது. இதனால் மீனவர்கள் பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது. இதற்கிடையே தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்களும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 11 பேரும் விசாரணைக்காக காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அனைவரும் சனிக்கிழமை ( 24) பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என தெரிகிறது.

கடந்த இரு வாரங்களில் தமிழக மீனவர்கள் 13 பேர் மீது மூன்று முறை இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி தமிழக மீனவர்கள் 11 பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் மீனவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



PAGE 1 தொடர்ச்சிகள்

## 'சாபக்கேட்டுக்கு முடிவு கட்டுவோம்"

யாழ். திருநெல்வேலி பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகத்தை ஞாயிற்றுக்கிழமை (25) திறந்து வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் வாழுகின்ற தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களிடம் பல ஆண்டுகளாக ஏக்கம் இருக்கிறது நாட்டை காப்பாற்றச் சிறந்த தலைவர் வேண்டும்.

எழுபது வருடகாலமாக நாட்டை ஆட்சி செய்தவர்கள் பல்வேறு வழிகளிலும் நாட்டை சூறையாடியுள்ள நாட்டை மீட்பதற்கு திருடியவர்களால் முடியவில்லை.

மீண்டும் தாய் நாட்டை திருடுவதற்குப் பலர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற நிலையில் அதனை மக்கள் தமது வாக்குப் பலத்தால் முறியடிக்க வேண்டும்.

மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்காகப் பல சுயேச்சை வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

நாட்டை வழிநடத்த இலஞ்சம் ஊழல் அற்ற தலைவர் வேண்டுமென்ற மக்களின் எதிர்பார்ப்பை வெற்றிகொள்ளக் கூடிய ஒரே ஒரு தலைவர் வேறு யாரும் அல்ல தோழர் அனுர குமார மட்டுமே.

ஆகவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமாரவை வெற்றிகொள்ள வைப்பதன் மூலம் நாட்டு மக்களை வெல்ல வைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## காங்கிரஸின் பிரசாரம் 30ஆம் திகதி ஆரம்பம்

நாட்டின் 9ஆவது ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதனையொட்டி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க கடந்த 18ஆம் திகதி இ.தொ.காவின் தேசிய சபை ஒன்றுகூடி ஏகமனதாக தீர்மானித்தது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மேலும் 2024 ஜனாதிபதி தேர்தலின், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது தெரிவித்தார்.

"எமது நாட்டின் இக்கட்டான பொருளாதார நெருக்கடியில் நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதியை அதிகப்படியான வாக்குகள் மூலம் மீண்டும் வெற்றி பெற செய்வோம் நாங்கள் அனைவரும் ஓரணியாகத் திகழ்வோம்" என இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## "ஒளிந்து விளையாட இடம் கிடையாது"

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பலமான கட்சியாகும். அதற்குக் கட்டுப்படாதவர்களை நாங்கள் தூக்கி எறிவதற்குத் தயங்க மாட்டோம்.

இந்த தேர்தலில் நாங்கள் அவ்வாறானவர்களின் செயற்பாடுகளை மிகக் கூர்மையாக அவதானிப்போம்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தொடர்பாக ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் தீர்மானத்துக்கு மாற்றமாக நடப்பவர்கள் மீது நான் மிகவும் இருக்கமாக இருப்பேன்.

எனது அன்பு, பாசத்திற்கு ஒரு அளவு உள்ளது. அளவு மீறி கட்சி காட்டுப்பாட்டை மறந்தால் நான் குடுமையாக பிரம்பை எடுக்க வேண்டி வரும். பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தாமதித்து வந்தமைக்கான ஒரு காரணத்தைச் சத்திய கடதாசி மூலம் தந்திருக்கிறார். அதை நான் உச்ச பீடத்துக்கு சமர்ப்பித்து தான் அவரின் இடைநிறுத்தத்திற்கான நீக்கலை சிந்தித்தோம்.

கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அவர் உத்தரவாதம் தந்துள்ளார்.

மிக இருக்கமாகச் சொல்கிறேன். இனி ஒருவருக்கும் பயப்படுவதற்கு நான் தயாரில்லை. இந்த தேர்தலில் அவர்கள் எப்படி நேர்மையாகச் செயற்படுகிறார்கள் என்பதை பொறுத்துத்தான் அடுத்த கட்ட அவர்களுடைய அரசியலுக்கான அங்கீகாரத்தை கட்சி தலைமை வழங்கும். சஜிதுக்கு பயந்து நான் இந்த தீர்மானத்துக்கு வரவில்லை என்றார்.

## "சமதூர பேச்சு"

திருகோணமலையில் சனிக்கிழமை (24) மாலை பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிக்கப்போகிறீர்கள் என்று பலரும் கேட்கின்றனர். பலமான பல அழுத்தங்களைக் கொண்டதும் மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் சம தூரத்தில் வைத்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம் தீர்க்கமான முடிவின் பின் யாருக்கு ஏன் ஆதரவளிப்போம் என கூறிய போது அதற்கான காரணங்களையும் முன்வைப்போம் அதன் பின் நீங்களும் பூரண ஆதரவை அளிக்கலாம் மக்கள் மத்தியில் தெளிவாகக் காரணங்களுடன் அறிவிப்போம்.

மூன்று வேட்பாளர்களுக்கும் நன்கு தெரியும் எமது மக்களுடைய வாக்குகள் தேவை என்று இதனால் பேரம் பேசும் சக்தியாக அழுத்தங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம் என்பதை மத்திய செயற்குழுவிற்கு அறிவித்துள்ளேன்.

எம்மை பற்றிய நிலைவரங்களை சிங்கள மக்களுக்கே அவர்களாகவே புரியக் கூடியவகையில் அறிவிக்கக் கூடிய நிலை இருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறேன் அதன் பின் கட்சி முடிவெடுக்கும் வரை பொறுமை காக்க வேண்டும் என உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## "துரோகிகளை தண்டிக்கத்...

மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் வந்த எமது எம்.பிக்கள், கொடுங்கோல் ஆட்சிபுரிந்த கோட்டாபயவை பலப்படுத்தவே இருபதாவது திருத்தத்துக்கு வாக்களித்தனர். பாராளுமன்றத்தில் 144 எம்.பிக்களை வைத்திருந்த இவருக்கு, சில சட்டங்களைத் திருத்துவதற்கு முடியாமலிருந்தது. இதனால், கொடுங்கோல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்காக, எமது எம்.பிக்களை விலை பேசினார். சமூகத்தின் மானத்தை அடகு வைத்து கோட்டாவிடம் இவர்கள் விலைபோகினர். இவர்களின் ஆதரவால் பலமடைந்ததாலேயே, எமது ஜனாஸாக்களை எரிப்பதற்கு கோட்டாபய துணிந்தார். விலைபோன எம்.பிக்களின் உறவினர்கள் எரிக்கப்பட்டிருந்தால், சமூக வலிகளை உணர்ந்திருப்பர். இதனால்தான், சமூக நெறிக்கு உட்பட்டும், நீதிக்குக் கட்டுப்பட்டும் இந்த எம்.பிக்களை தூக்கி எறிந்துள்ளோம் என்றார்.

## மன்னார் சிந்துஜாவின் கணவர் உயிர்மாய்ப்பு

மன்னார் வைத்தியசாலையில் அண்மையில் இளம் தாய் ஒருவர் குழந்தை பெற்ற நிலையில் சில நாட்களின் பின்னர் இரத்த போக்கால் மீண்டும் மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அங்கு வைத்தியசாலை ஊழியர்களால் கவனிக்கப்படாத நிலையில், உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டு பெரும் சர்ச்சை ஏற்பட்டு இருந்தது.

இந்நிலையில் அவருடைய கணவர் தனது சொந்த ஊரான வவுனியா பனிக்கர் புளியங்குளத்தில் வசித்து வந்திருந்தார்.

இந்நிலையில், தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலுக்கே 'சதா' ஆதரவு

இவ்விடயம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று சுப்பையா சதாசிவத்தின் தலைமையில் நுவரெலியாவில் உள்ள அவரின் கட்சி காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) பிற்பகல் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட அவர் ஜனாதிபதி வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

அதேநேரத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் நமது நாடு பொருளாதார பின்னடைவைக் கண்டு வீழ்ந்த நிலையில் நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மாத்திரம் முன்வந்து சர்வதேச நாணய நிதியம் ஊடாக கடன் பெற்றேனும் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றினார்.

அந்த வகையில், வெளிநாட்டுத் தலைவர்களின் நன்மதிப்பும் நம்பகத் தன்மையும் கொண்ட தலைமைத்துவ அனுபவசாலி ரணில் விக்ரமசிங்க கடந்த இரண்டு வருட காலத்தில் உலகின் பல நாடுகளில் கடன் உதவிகளைப்பெற்று இலங்கை நாட்டில் அனைத்து மக்களும் துன்பம் இல்லாமல் ஓரளவு வாழக்கூடிய நிலையை இவர் உருவாக்கி இன்று மக்கள் மனதிலும் நீங்காத இடம் பிடித்துள்ளார் என்றார்.

## மு.கா. தேசிய பிரசார செயலாளர் இடைநிறுத்தம்

எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பகிரங்கமாக ஆதரிப்பதால், தலைவர் ரவூப் ஹக்கீமின் அறிவுறுத்தலின் பேரில்

கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ள முபீன் ஒரு வாரக் காலத்துக்குள் தன்னுடைய விளக்கத்தைக் கட்சிக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் சம்பந்தமாகக் கடைசி முடிவு கட்சியின் உயர் பீட கூட்டத்தில் எடுக்கப்படும் என்றும் நிஸாம் காரியப்பர் மேலும் தெரிவித்தார்.

## மரணித்த வேட்பாளருக்கு புதியவரை நியமிக்கலாம்

எவ்வாறாயினும், வாக்குச் சீட்டில், மொஹம்மட் இலியாஸின் வாக்காளர் சின்னமும் பெயரும் அச்சிடப்பட்டுள்ளதால் அவற்றில் மாற்றங்கள் ஏதும் இடம்பெற மாட்டாது என தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவசாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை சுயாதீன வேட்பாளராகப் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த புத்தளத்தை சேர்ந்த டொக்டர் ஹைதுருஸ் மொஹம்மட் இலியாஸ் வியாழக்கிழமை (22) காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 79 ஆகும். மாரடைப்பால் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் மரணமடைந்தார்.

## கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம்

■ க.அகரன்

தென்பகுதி வேட்பாளர்கள் காத்திரமான பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அது தொடர்பில் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை (25) இடம்டபெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்திய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தமிழ் பொது வேட்பாளரை வெல்ல வைப்பதற்கான நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விடயங்களை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது. ஏற்கனவே வடக்கு - கிழக்கில் பிரச்சார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தனது முழுமையான பங்களிப்பை வழங்கும். மாவட்ட ரீதியான முகவர்களை நியமிக்க வேண்டியுள்ளது. மாவட்ட ரீதியாகத் தேர்தல் அலுவலகங்களை திறக்க வேண்டியுள்ளது. அதனை எவ்வாறு மேற்கொள்வது என பல விடயங்களைப் பேசியுள்ளோம். இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் சிவில் அமைப்புக்களுடன் கலந்துரையாடி பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.



## காதுகளால் வாகனத்தை இழுத்து சாதனை

■ பு.கஜிந்தன்

யாழ். தென்மராட்சியின் சாதனை நாயகன் செல்லையா திருச்செல்வம், 1,500 கிலோ கிராம் எடையுள்ள ஹயஸ் வாகனத்தை 100 மீட்டர் தூரம் தனது இரு காதுகளால் கட்டி இழுத்து சாதனை படைத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை 9 மணியளவில் யாழ். கொடிகாமம், நட்சத்திர மஹால் முன்றலில் ஏ9 வீதியில் இந்த சாதனை நிகழ்வு இடம்பெற்றது.

இதேவேளை, தமிழ்நாடு, கொழும்பு, யாழ்ப்பாணம் என முன்னர் பல தடைகள் செல்லையா திருச்செல்வம், தனது தாடியால் பல்வேறு வாகனங்களை இழுத்துச் சாதனைபுரிந்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

## வசூலிக்கும் வரி குறுஞ்செய்தியில்

அரசாங்கத்தை பொறுப்பேற்ற இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் இந்த முறை அறிமுகப்படுத்தப்படும் என பலாங்கொடையில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் கூறினார்.

"இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஒவ்வொரு ஆண்டும் வரி செலுத்துவோரின் கைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்புவோம், அவர் செலுத்திய வரியின் அளவு மற்றும் வரிப் பணம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது பற்றிய புதுப்பிப்பை அவர்களுக்கு வழங்குவோம். கல்வி, சுகாதார வீதி மேம்பாடு போன்றவற்றில், வரி செலுத்துவோர், தாங்கள் செலுத்தும் வரிப்பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதை அறிந்து கொள்வார்கள்," என்றார்.

மக்களும் வர்த்தகர்களும் வரி செலுத்த விரும்புவதாகவும் வரிப்பணம் கொள்ளையடிக்கப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை எனவும் திஸாநாயக்க தெரிவித்தார்.

"வரியை செலுத்தும் போது, மக்கள் அதன் பலனைப் பெற வேண்டும். நாங்கள் வெளிப்படையான முறையில் நியாயமான வரி வசூலிப்போம்," என்று அவர் கூறினார்.

## "விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவேன்"

வர்த்தகர்களின் விலை அதிகரிப்புக்கு இடமளிக்காது, மக்களால் ஏற்றுக்கொள்ள முடியுமான விலைக்குப் பொருட்கள் வழங்கப்படும். உர விநியோகத்தின்போது கம நல சேவைகள் மத்திய நிலையத்தை மையமாகக் கொண்டு வெளிப்படைத் தன்மையுடன் இந்த வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் 14ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(25) பொலன்னறுவை, ஹிங்குராங்கொட நகரில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், QR Code முறையை மையப்படுத்தி விவசாயிகளுக்கு, மீன்பிடித் தொழிலாளர்களுக்கு, முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு, பாடசாலை போக்குவரத்து சேவையாளர்களுக்கு, ஆலையுரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா அச்சுறுத்தல், உர மோசடி, நானோ உர மோசடி போன்றவற்றின் ஊடாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தம்மிடம் உள்ள பணத்தைக் கொண்டும் தங்க ஆபரணங்களை அடகு வைத்து, கிடைக்கின்ற பணத்தைக் கொண்டும் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்குக் கடந்த காலங்களில் அடிக்கு மேல் அடி விழுந்து அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். அவ்வாறு அழுத்தங்களுக்கு உள்ளாகி மூன்று வேலையும் உணவு உண்ண முடியாமல் இருக்கின்ற விவசாயிகளின் விவசாயக் கடனை இரத்து செய்வோம்.

அத்தோடு, விவசாயிகளின் விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான நிர்ணய விலை ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். மோசடியான முறையில் விவசாயிகளையும் நுகர்வோர்களையும் பாதிக்கின்ற ஏற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. நுகர்வோருக்கும் சாதாரண விலையில் பொருள் கிடைப்பதோடு நெல்லுக்கும் உயர்ந்த நிர்ணய விலை ஒன்றை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

பிணைகள் இன்றி அரச வங்கிகளில் கோடிக்கணக்கான தொகையைக் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ள செல்வந்தர்கள், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களோடு நட்புறவைப் பேணி அந்தக் கடன் தொகைகளை இரத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், விவசாயிகளின் கடன்களை இரத்து செய்ய அரசாங்கத்தால் முடியாமல் போயுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக நாட்டுக்கு உணவளிக்கின்ற விவசாயிகளுக்கு நன்றி உணர்வாக இந்தக் கடன்களை இரத்து செய்வோம். இந்த சிறிய மனிதர்களின் ஜனாதிபதி என்ற வகையில் அந்தப் பணியை நிறைவேற்றுவேன். நாட்டுக்கு உணவு அளிக்கின்ற விவசாயிகளுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவேன்.

பல மாவட்டங்களில் பரம்பரையாக காணப்பட்ட விவசாய காணிகள் இல்லாமல் போயிருக்கின்றது. பல தசாப்தங்களாக எல்லைக் கற்களை இட்டு விவசாயம் செய்த காணிகள் அவர்களுக்கு இல்லாமல் போயிருக்கின்றது. அந்தக் காணிகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதோடு, இந்த நாட்டின் இயற்கை வளங்கள், வன வளங்கள் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கி மக்கள் மயப்படுத்தப்பட்ட வனவளங்களாகப் பாதுகாத்து, விவசாய நிலங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம். சேதமடைகின்ற விவசாயிகளின் பயிர்களுக்கு முறையான காப்புறுதி திட்டம் ஒன்றையும் ஏற்படுத்துவதோடு, காட்டு யானை தாக்குதல்களையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் தற்பொழுது வேலை செய்ய முடியாத தலைவர்கள் இருக்கின்ற போதும், ஐக்கிய மக்கள் சக்தி 76 வருட ஜனநாயக காலத்தில் பிரபஞ்சம் மூச்சு போன்ற வேலை திட்டங்களின் ஊடாக பில்லியன் கணக்கான வேலைகளை முன்னெடுத்துள்ளோம். இப்பொழுது மக்கள் அபிப்பிராயத்திற்காக வந்திருக்கின்றோம். இனிய தலைவர்கள் நாட்டைச் சுற்றி வெற்றிப் பேச்சுக்களோடு சென்ற போதும் நாம் நாட்டுக்கு சேவை செய்திருக்கின்றோம். வெற்றிப் பேச்சுக்களோடும் வெறும் காட்சிப்படுத்தல்களோடு மாத்திரம் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது எனவும் இதன்போது சுட்டி காட்டினார்.

# இருவர் பேரினவாதிகள்; ஒருவர் மழைக் காளான்



பாறுக் ஷிஹான்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னணி வேட்பாளர்களில் சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸாநாயக்க பேரினவாதிகளாவர் மற்றொரு வேட்பாளரான நாமல் ராஜபக்ஷ நேற்றைய மழைக்கு முளைத்த காளான் என என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது ஒரு பௌத்த நாடு, சிங்கள நாடு, அதைப் பேணிப் பாதுகாப்போம் என்று குறிப்பிட்டு, வடக்கு கிழக்கில் 1,000 பௌத்த விகாரை அமைப்பதாகவே பேரினவாதிகள் 75 வருடங்களாகக் கூறுகின்றனர். சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனமும் அவ்வாறு தான் இருந்திருக்கிறது என்றார்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குபட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு தெளிவூட்டும் துண்டுப் பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் சனிக்கிழமை (24) ஈடுபட்டிருந்தார். அதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், 75 வருடங்களாகத் தமிழருக்கு உரிமை வழங்க மாட்டோம் என்று பேரினவாதிகள் கூறி இருக்கிறார்கள். குறிப்பாகப் பேரினவாதிகள் சிங்கள மக்களுக்கு இவ்வாறு கருத்துக்களைக் கூறி வருகிறார்கள். அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது ஒரு பௌத்த நாடு, சிங்கள நாடு, இதைப் பேணிப் பாதுகாப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

சஜித் பிரேமதாச, அமைச்சராக இருந்தபோது தான் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் சட்டவிரோத விகாரை கூட கட்டப்பட்டிருந்தது.

அனுரகுமார திஸாநாயக்கவை பற்றிக் கூற தேவையில்லை. மோசமான இனவெறி கொண்ட ஒருவர். இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை அழித்து ஒழிப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைத் திரட்டி இராணுவத்திற்குக் கொடுத்திருந்த ஒரு கொலைவெறி பிடித்த குழு ஒன்றின் தலைமைச் சக்தியாக அவர் இருக்கின்றார்.

அது மாத்திரமின்றி, வடக்கு கிழக்கினை வழக்கு தாக்கல் செய்து பிடித்தவர்கள். இவர்கள் எல்லோரது நிலைப்பாடுகளும் இவைகள் தான். இதில் நாமல் ராஜபக்ஷ விதிவிலக்கானவரல்லர். இதனால் தான் இவர்களிடம் தமிழருக்கு உரிமை கொடுக்கப் போகின்றோம் என கூறினால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதி உங்களின் சிங்கள மக்களுக்குச் சொல்லுங்கள். இந்த தோல்வியடைந்த ஒற்றையாட்சியை ஒழிக்கப் போகின்றோம். சமஷ்டியைக் கொண்டு வரப் போகின்றோம் என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தி வாருங்கள் என நாங்கள் கூறுவது நம்பிக்கைக்காகத் தான். நேற்று முளைத்த காளானாக இருக்கின்ற இந்த நாமல் ராஜபக்ஷவிற்கு சமீப காலமாகப் பல கருத்துக்களைக் குறிப்பிடும் துணிச்சலைக் கொடுத்தது சுமந்திரன் சம்பந்தன், அரியநேத்திரன், சிறிதரன், உட்பட இந்த தமிழரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு 2010 மற்றும் 2015, 2020ஆம் ஆண்டுகள் வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் முழு பேரும் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.





# நல்லூர் பாதயாத்திரை

க.அகரன்

வவுனியா-வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்கு வேல் தாங்கிய நடைபாதை யாத்திரை ஞாயிற்றுக்கிழமை(25) ஆரம்பமானது.

வவுனியா ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றதன் பின்னர் முருகப்பெருமானின் திருவுருவம் தாங்கிய ஊர்தியோடு வேல் தாங்கி நடைபவனி ஆரம்பமானது.

இந்த பாதை யாத்திரையானது எட்டு நாட்கள் ஏ- 9 வீதி ஊடாக சென்று அனைத்து கோவில்களிலும் தரிசித்து நல்லூர் தேர்த்திருவிழாவான செப்டெம்பர் (01) திகதியன்று நல்லூர் கோவிலை சென்றடையும்.



# I.N.S. மும்பை கொழும்புக்கு விஜயம்



இந்தியக் கடற்படையின் முன்னரங்க போர்க் கப்பலான ஐ.என்.எஸ். மும்பை மூன்று நாள் விஜயமாக இன்று திங்கட்கிழமை 26ஆம் திகதி கொழும்புக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது. இக்கப்பலுக்கு இலங்கை கடற்படையினரால் சம்பிரதாயபூர்வமாக வரவேற்பு வழங்கப்படும்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட டெல்லி ரகத்தைச் சேர்ந்த நாசகாரி கப்பல்களில் மூன்றாவது கப்பல் ஐ.என்.எஸ். மும்பை ஆகும். மஸ்கன் டொக் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இக்கப்பலுக்கு மும்பை நகரின் பெயரை அடிப்படையாகக் கொண்டு பெயர் சூட்டப்பட்டது.

இக்கப்பல் அதன் தரமுயர்த்தல் பணிகளின் பின்னர் 2023 டிசெம்பர் 8ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை பிரிவிடம் சேவையில் இணைக்கப்பட்டது. இக்கப்பல் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்திற்கும் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

ஐ.என்.எஸ். மும்பை 2024 ஆகஸ்ட் 29ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வளர்ப்பு பன்றி கடித்து வயோதிபப் பெண் பலி

எஸ்.தில்லைநாதன்

நெடுந்தீவு பகுதியில் பன்றி கடித்ததால் படுகாயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை (24) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு 15ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த நாகமுத்து லட்சுமி (வயது 80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் சனிக்கிழமை(24) மாலை வீட்டுக்கு வெளியே வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, அங்கிருந்த வளர்ப்பு பன்றி ஒன்று



அவரை கொடூரமாகத் தாக்கியது. இருதயம் வெளியே தெரியும் அளவுக்குக் கடித்துக் குதறியது.

இதில் படுகாயமடைந்த குறித்த வயோதிபப் பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை

**“குறித்த பெண் வீட்டுக்கு வெளியே வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அங்கிருந்த வளர்ப்பு பன்றி ஒன்று அவரை கொடூரமாகத் தாக்கியது**

பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.


## விற்பனைக்கு

பத்தரமுல்லையில் உள்ள உணவகம் ஒன்றுக்கு சமையலாளர், சேன்விட்ச், சம்மெரின் தயாரிப்பவர் மற்றும் கணக்காளர் தேவை.
0773409108, 0702545892



## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் வரும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்**
செம்ரோ ரிசெப்ஷன் ஹோல் (பிரைவேட்) லிமிடெட்


**கம்பனியின் புதிய பெயர்**
க்றேண்ட் மினாரோ (பிரைவேட்) லிமிடெட்

**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி**
இல. 660, வெலிப்பிள்ளேவ, தெடிகமுவ

**பதிவு செய்யப்பட்ட இலக்கம்:** பி வி 84424

**பணிப்பாளர் சபையின் உத்தரவின்படி**
**க்றேண்ட் மினாரோ (பிரைவேட்) லிமிடெட்**
**செயலாளர்கள்**


# விபசார விடுதி நடத்திய மூன்று பெண்கள் கைது



கல்கிஸையில் ஆயுர்வேத மத்திய நிலையம் என்ற போர்வையில், வீடொன்றில் விபசார விடுதியை நடத்தி வந்த மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல் பிடியாணையின் பிரகாரம், கல்கிஸை பொலிஸ் பிரிவில், வெடி கந்த வீதி பிரதேசத்திலேயே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, அந்த விடுதியின் முகாமையாளரான பெண்ணும், சேவையை வழங்கிய குற்றச்சாட்டில் அங்கிருந்த 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட மூன்று பெண்களும் கைது செய்யப்பட்டனர். இவர்கள், அனுராதபுரம், பாணந்துறை மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சிறுவர் பாதுகாப்பு நாடகம்



மெய்யன்

சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு பூண்டுலோயா டன்சினன் தோட்ட வைத்தியசாலை வெளியரங்கில் அண்மையில் நடத்தப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நாடகம், நடன நிகழ்ச்சிகள் ஊடாகவே இந்த விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

இதன்போது, தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளும் பிரசன்னமாய் இருந்தனர். நாடக பயிற்றுவிப்பாளர் மலையக வாசுதேவனும் பங்கேற்றிருந்தார்.




# புதையல் தோண்டிய 11 பேர் கைது

தெரணியகல-ரஸ்னா கந்த பிரதேசத்தில் தொல்பொருட்களைத் தோண்டிய 11 பேர் வெடிபொருட்கள் புதையல் தோண்டும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 10 கிலோ கிராம் அமோனியா, 42 டெட்டனேட்டர்கள், 22 கம்பி பொருத்தப்பட்ட டிரில் பிட்கள், 24 ஜெலட் நைட் குச்சிகள், 3 கிலோ கிராம் கன்பவுடர் மற்றும் 6 சுருள்கள் சர்வீஸ்த்ரெட் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28 முதல் 55 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் தெரணியகல, கொழும்பு, யக்கல ஜா-எல, பிலியந்தல, களுபோவில, கம்பஹா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சாமானியர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும்

ஜனாதிபதித் தேர்தல் களம் தற்போது சூடுபிடித்துள்ளது. தமது வாக்குகளைப் பெருக்கும் நோக்கில் ஜனாதிபதி வேட்பாளர்களும் அந்தந்த கட்சிகளின் பிரதிநிதிகளும் அரசியல் இலாபங்களை எதிர்பார்த்து வாக்களிக்கும் மக்களை இலக்கு வைத்து பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு ஓரளவு மீண்டிருப்பது உண்மைதான். ஆனால், பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு முழுமையாக மீளவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அதற்கு நாம் மெதுவாக முன்னேற வேண்டும்.

பொருளாதாரத்தை நிரந்தர ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வருவதற்கு, பொருளாதாரத்தை மீட்டெடுக்கப் பின்பற்றப்படும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தற்போதைய பொருளாதார கொள்கைகளின் திசையில் தொடர வேண்டும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனாதிபதியாக எந்த வேட்பாளர் நியமிக்கப்பட்டாலும், அவருடன் இணைந்து செயற்படுவதற்கு எந்த அமைச்சரவையை நியமித்தாலும், எதிர்கால அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டிய முக்கிய விடயம், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் செயற்பாடுகளைத் தொடர்வதற்கும். வேறு எதற்கும் அல்ல. அதற்கு அந்தந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் அல்லது கட்சிகளின் கொள்கை மாற்றங்கள் தடையாக இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தைத் தொடர்வதற்குத் தடையில்லை என்றால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துப்போகாத விடயங்கள் கலந்துரையாடப்பட்டு மேலதிக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எனது பொருளாதார பயணத்தை முன்னெடுத்துச் செல்ல இயலும் என்றால் தற்போதைய வேலைத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையில் செயல்படுத்தப்படுவதால் எந்த பாதிப்பும் ஏற்படாது. அப்படியானால், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் பாதிக்கப்படாது.

எதிர்காலத்தில் ரணில் விக்ரமசிங்கவுக்கு பதிலாக வேறொரு ஜனாதிபதி வேட்பாளர் வந்தாலும், அந்த அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்கள் ஐ.எம்.எப். உடன் பேச்சுவார்த்தை நடத்தி புதிய உடன்படிக்கைகளை எட்ட முடியும். தற்போதுள்ள ஐ.எம்.எப். உடன் கடுமையான பிரச்சினை எழும். மாற்றங்கள் செய்யப்பட்டால், அது திட்டத்திலிருந்து விலகுவதற்கு வழிவகுக்கும். அப்படியானால், ‘எதிர்கால அரசாங்கம்’ தற்போதுள்ள நிதி திட்டத்திலிருந்து விலகும் என்று கற்பனை செய்வது கடினம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கையை மீளப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சில ஜனாதிபதி வேட்பாளர்கள் மேடைகளில் கூறினாலும், அப்படிச் செய்தால் நாடு தன்னிடம் உள்ள பணத்தை இழந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்தக் கூற்றில் ஓரளவு உண்மை இருந்தாலும், இது முழு உண்மையல்ல என்று நாங்கள் நம்புகிறோம். அதாவது, ஐ.எம்.எப். 2022இல் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுவிப்பதற்காகவே இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதால், பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் குறித்து ஆலோசித்து புதிய ஒப்பந்தங்களை எட்ட முடியும்.

குறிப்பிட்ட சில குழுக்களை இலக்கு வைத்து அரசாங்கம் சலுகைகளை வழங்கும் என ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் இருந்து அறிக்கைகளை நாம் கேட்கின்றோம். ஆனால், இங்கு சாமானியர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று எளிமையாகச் சொல்கிறோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்துக்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

வெளயில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது என தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் திருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி, அலாதியானது பொது நலத்தொண்டுகளில் இளைஞ தலைமுறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானது.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளைத் தினமும் பத்திரிகைகளில், படித்திருக்கின்றோம்

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தைக் குளிரவைக்கும் செயலாகும். புற அழகை விட, அக அழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்கள் துன்பங்களைக் கண்டு திரும்பிப் பார்க்காமல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

# ஐ.நா. அறிக்கைக்குள் சிக்கும் ஜனாதிபதித் தேர்தல்

**லக்ஸ்மன்**

யுத்த மௌனிப்பின் பின்னர், தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த இராஜதந்திர முயற்சிகளின் தோல்வியின் பயனான அடுத்த கட்ட முயற்சியே தற்போதைய தமிழ் பொது வேட்பாளர் என்பதை நினைவூட்டுவதாகவே இலங்கையின் புதிய ஜனாதிபதி பொறுப்புக் கூறலை உறுதி செய்து நல்லிணக்கத்தை பேண வேண்டும் என்ற மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வோகர் டர்க்கின் செப்டெம்பர் அமர்வுக்கான முன் அறிக்கை கூறும் கருத்து வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் முன் அறிக்கை வலியுறுத்தியிருக்கின்ற இலங்கையில் தவறிழைப்பவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படாத கலாசாரம் தொடர்வதே அந்த நாட்டில் பல பிரச்சினைகளுக்கு மூல காரணமாக அமைந்துள்ளது என்ற கருத்து வெறுமனே ஒதுக்கிவிட்டுப் போகக்கூடியது அல்ல என்றாலும், இந்த அறிக்கைக்குத் தனது கடுமையான மறுப்பினை இலங்கை அரசாங்கம் வெளியிட்டிருப்பது பொறுப்புக் கூறலையும் நல்லிணக்கத்தையும் விரும்பாத்தனத்தையே காண்பிக்கிறது என்பதுடன், எதிர்காலத்திலும் இவை நிறைவேறுமா என்ற சந்தேகத்தையும் தோன்றச் செய்திருக்கிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அறிக்கை உயர்ஸ்தானிகரால் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், அவரது இறுதி அறிக்கைக்கு முன்னரான அறிக்கை இம்மாதம் 22ஆம் திகதி வெளியானது.

இலங்கையில் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதைக் கவனத்தில் எடுத்துள்ள மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வோகர் டர்க் இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெறும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் இல்லாத சூழல் மென்மேலும் அப்படியான மீறல்களுக்கு வழிவகுக்கிறது. இலங்கை தொடர்பான தனது இறுதி அறிக்கைக்கு முன்னரான அறிக்கையில், பதவிக்கு வரும் ஜனாதிபதி, அனைவரையும் அரவணைத்து நல்லிணக்கத்தைப் பேண வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், “தேர்தலை அடுத்து புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி - ஓர் அவசர விடயமாக - இலங்கை நாட்டுக்கென அனைவரையும் அரவணைக்கும் ஒரு தேசிய நோக்கினை முன்னெடுத்தல் வேண்டும். அந்நோக்கு முரண்பாட்டுக்கான மூல காரணங்களை கவனத்திலெடுத்து, ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கு, அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் தேவையான அடிப்படையான அரசியல் யாப்பு மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை முன்னெடுத்தல் வேண்டும்” நாட்டில் எந்த தவறுகளையும் இழைத்து விட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதிலிருந்து தப்பிக்கலாம் அல்லது சட்டத்தின் முன் நிறுத்தப்படாமலேயே இருக்க முடியும் என்ற கலாசாரம் புரையோடிப் போயுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் உறுப்பு நாடுகளுக்கு இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள பரிந்துரையில், சர்வதேச குற்றங்களை இழைத்ததான குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள அனைத்து தரப்பினரையும், தேசிய நீதி பரிபாலன வழிமுறைகள் ஊடாக வழக்குத் தொடுத்து நீதிமன்றத்தில் நிறுத்த விசாரணை அமைப்புகளுடன் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு செயற்படும்போது, தேசிய அதிகார வரம்புகளில், ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில், இலங்கைக்கு வெளியேயோ அல்லது சர்வதேச வலையமைப்புகளின் ஊடான அதிகார வரம்புக்கு உட்பட்டும், பரஸ்பர சட்ட வழிமுறைகள் மற்றும் உதவிச் செயற்பாடுகள் மூலமும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும், இதன்போது, மோதல்களில் உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். மாத்திரமின்றி, பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேச சட்ட வழிமுறைகளையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் உறுப்பு நாடுகள் ஆராய வேண்டும் எனவும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வோகர் டர்க் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது இலங்கையின் மீதான ஒரு நெருக்கடியைப் பிரயோகித்தல் என்பதற்கு அப்பால் உறுப்பு நாடுகள் தேவையற்ற விதத்திலும் பொருத்தப்பாடில்லாமலும் இலங்கைக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் அனுசரணையும் வழங்குவது தவறு என்பதனையும் சுட்டிக்காட்டுவதாகப் பார்க்க வேண்டும். இதிலிருந்தேனும் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் தனது நீதியை நிலைநாட்டும் தன்மைக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று நாம் நம்பவேண்டும்.

இலங்கையில் செப்டெம்பர் இறுதியில் ஜனாதிபதி தேர்தலும், விரைவில் பாராளுமன்ற தேர்தல் என தேர்தல்களை நோக்கி நாடு செல்லும் நிலையில், தேர்தலுக்கு முன்னர், தேர்தல் காலம் மற்றும் அதற்குப் பின்னரும் மனித உரிமைகளை மதித்து நடப்பது, கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது, அமைதியான வழியில் ஒன்றுகூடுவது, போராடுபவர்கள் மீது அதிகபடியான பலத்தைப் பிரயோகிப்பது ஆகியவற்றைத் தவிர்ப்பது போன்றவைகளில் அரசுக்கு ஒரு பொறுப்புள்ளது. அது மாத்திரமின்றி, சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்துகின்ற வகையில் மத மற்றும் பாலியல் ரீதியாகவோ அல்லது இதர காரணங்களுக்காக உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவது போன்றவை தடுக்கப்பட வேண்டும். மேலும், தேர்தல் தொடர்பான அல்லது ஏனைய மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெறாமல் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். என்பது மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வோகர் டர்க்கின் செப்டெம்பர் அமர்வுக்கான முன் அறிக்கையின் சாராம்சமாகக் காணப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் மாத கூட்டத்தொடர், மற்றும் மார்ச் மாத ஐ.நா. அமர்வு காலங்கள் தமிழ் மக்கள் தமக்கான நீதியைச் சர்வதேசம் வழங்கு என்று நம்பி எதிர்பார்த்திருக்கின்ற காலங்களாகும். அதே நேரத்தில், இலங்கை அரசாங்கம் தமது எதிர்ப்புகளை வெளியிடுவதும், ஐ.நாவில் கொண்டுவரப்படுகிறது பிரேரணைகளை எதிர்கொள்வது தொடர்பிலும் பிரயத்தனம் எடுத்துக்கொள்ளும் காலமாகும். அத்துடன், சிங்களப் பேரினவாத தரப்பினர் பல்வேறு எதிர்ப்புக்களையும் வெளியிடும் காலமாகவும் இருப்பது. வழமை. இருந்தாலும், இவ்வருடத்தில் செப்டெம்பர் மாதமானது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காரணமாக அமைந்திருக்கிறது. அத்துடன், அமர்வு முடிவுக்கு முன்னரே ஐ.நாவின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

அந்த வகையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் 39 வேட்பாளர்களும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை தம்முடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும், பிரசாரங்களிலும் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளிலும் கவனத்திலெடுத்தல் முக்கிய படுத்தப்பட்டிருக்கிறது.

நாட்டில் அனைத்து மட்டங்களிலும் இடம்பெறும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் நடைமுறை இல்லாததே இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்களுக்கு அடிப்படை காரணமாக உள்ளதாகக் கூறமுடியும். இவ்வாறான நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கிறார். தவிரப் பிரதான வேட்பாளர்களாக சுயேச்சை வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகப் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் தொடங்கிவிட்ட தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் பல வழிகளைத் தாண்டி தோற்று, பாரிய மனித உரிமை மீறல்கள் அல்லது அட்டூழியங்களை எதிர்கொண்டு, ஏமாற்றப்பட்டே இந்த நிலையை எட்டியிருக்கிறது. 1931இல் வாக்களிப்பு உரிமையைப் பெற்ற ஜனநாயக நாட்டில் ஆரம்பத்திலிருந்து தமிழ் மக்கள் எதிர்த்து வாக்களித்த நிலைமை காணப்பட்டது. அதே போன்று தம்முடைய நிலைப்பாட்டை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிப்பின் மூலம் காண்பித்ததும் உண்டு. இப்போது நடைபெறும் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி தம்முடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்த இருக்கின்றனர் என்பதே சர்வதேச, வெளி உலகுக்கும் தெற்குக்குமான செய்தி.

எதிர்ப்பும், வாக்களிப்பும், தமது தரப்புக்கான கோரலும் என நகரும் தமிழ் மக்களின் ஜனாதிபதி தேர்தல் அரசியலில் இச்செய்தி மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வோகர் டர்க்கின் செப்டெம்பர் அமர்வுக்கான முன் அறிக்கை செய்தியுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் பிரயோகிக்கப்படுவதே சிறப்பானதாகும். இதன் வெளிப்பாடும் பயனும் செப்டம்பர் இறுதியில் வெளித்தெரியும்.

## கடிதங்கள்

### திணைக்களம் தயாரில்லை


கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான குளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அவற்றிற்கு எல்லை கற்கல் இட்டு அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எல்லைக் கற்கள் கொள்வனவு செய்யப்பட்டு தயாராக உள்ள போதும் அவற்றினை கொண்டு குளங்களுக்கு எல்லையிடுவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் தயாராக இல்லாதிருப்பது கவலையளிக்கிறது என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
கனகாம்பிகைகுளம் அதன் பின்பகுதியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 25 ஏக்கர் வரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, புதிது புதிதாகச் சிலர் மண் நிரப்பி குளங்களை ஆக்கிரமித்து வருகின்றனர். இது எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தம் உட்பட மிக மோசமான சுற்றுச் சூழல் பாதிப்பினை ஏற்படுத்தும். வனவளத் திணைக்களம் தங்களின் காடுகளைப் பாதுகாக்க எல்லைக் கற்களைப் பதித்தது போன்று குளங்களுக்கும் எல்லைக் கற்களைப் பதிக்க வேண்டும். குளங்களைப் பாதுகாக்கும் அக்கறையுடன் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொது மக்கள் கோரியுள்ளனர்.

– மு.தமிழ்ச்செல்வன்





# அலட்சியமாகிறது ஆசிரியர் தொழில்



இளமாறன் ஜதுர்ஷினி,
இரண்டாம் வருடம் கல்வியியல்
சிறப்பு கற்கை மாணவி,
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்.

உலகிலே தலைசிறந்த தொழில்களில் ஆசிரியர் தொழிலும் சிறந்த இடத்தை பெற்றுள்ளது. இருப்பினும், 'புது தும்புத்தடி நல்லா கூட்டும் என்பதனைப் போல' ஆசிரியர் தொழில் கிடைக்கும் வரை அதனை இலட்சியமாகவும் கிடைத்த பின்னர் அலட்சியமாகவும் பார்க்கின்றனர் எமது ஆசிரியர்களில் சிலர்.

நாம் ஒரு காலத்தில் குருகுல கல்வி பற்றி அறிந்திருப்போம், கல்வியை வழிநடத்துகின்ற குரு அதாவது ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் தொழிலில் அதிகப் பற்று வைத்து மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி புகட்டினார்கள். ஆனால், தற்கால ஆசிரியர்களின் பெரும்பாலானோர் பாடசாலைக்கு வந்தோமா, பாட நேரத்தில் ஒரு வகுப்பிற்குள் அமர்ந்தோமா, அதன் பிறகு வீடு திரும்பினோமா, என்பதையே குறிக்கோளாக வைத்துள்ளனர்.

நாம் அனைத்து ஆசிரியர்களையும் இவ்வாறு குற்றம் கூற முடியாது. தனது ஆசிரியர் சேவையைப் புனிதமான சேவையை என மனதில் பதித்து தொழில் புரிவர் ஒரு சில ஆசிரியர் இருப்பினும், பலரின் ஆசிரியர் பணி நல்ல மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு காணப்படுவதில்லை என்பதுதான் வருத்தம்.

தன் ஆசிரியப் பணியில் அலட்சியப் போக்கைக் காட்டும் ஆசிரியர்கள் அதனை பல்வேறு விடயங்களின் ஊடாக (அலட்சியப் போக்கை) அவர்களே வெளிப்படுத்துகிறார்கள் எனலாம்.சில ஆசிரியர்கள் வகுப்பறைக்கு நுழைந்ததும் ஏதாவது வீட்டுப்பாடத்தை மாணவர்களுக்கு வழங்கி விட்டு கதிரையில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொள்கின்றனர்.

மாணவர்களும் அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல் இந்த ஆசிரியர் இப்படித்தான் என்ற மனநிலையில் ஓய்வு எடுத்துக் கொள்கின்றனர்.ஒரு சில ஆசிரியர்கள் பாடசாலையில் குறித்த பாட வேளையில் மாணவர்களுக்குக் கல்வி புகட்டாமல் தன் பிரத்தியேக வகுப்பில் இணைந்து பணம் செலுத்தி கல்வி பயிலுமாறு மாணவர்களை மறைமுகமாக ஊக்கப்படுத்துகின்றனர்.

இவை மட்டுமா நடக்கிறது என்று கேட்டால் இவற்றை விட எம் ஆசிரியர்களில் சிலர் பல்வேறு கேளிக்கையான வேலைகளும் செய்கின்றனர். வகுப்பறைக்கு தேநீர் அருந்தும் கேத்தலை எடுத்து வந்து ஆறுதலாகத் தேநீர் அருந்துதல், மாணவர்களுக்கு முன் தொலைபேசி கலந்துரையாடல்கள் போன்றவையும் மற்றும் சில பாடங்களில் சில மாணவர்கள் தொடர்ந்து புள்ளிகள் குறைவாக எடுப்பதற்கான பிரதான காரணம் குறித்த சில ஆசிரியர்கள் 'வேண்டாம் வெறுப்பாக' தங்களுக்குரிய பாடங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதே ஆகும்.

இவ்வாறான பல்வேறு செயல்பாடுகளின் மூலம் அவர்கள் தங்கள் ஆசிரியர் பணியில் அலட்சியப் போக்கைக் காட்டுவது எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.இவ்வாறான சில ஆசிரியர்களுக்குச் சொல்ல விரும்புவது ஒரே ஒரு விடயம் தான் ஒய்யாரமாக வகுப்பறையில் அமர்ந்து செல்வது சிறந்த ஆசிரியர் பணியாகாது! மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களை எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக உருவாக்க அயராது உழைக்க வேண்டும், அவர்களே தலைசிறந்த ஆசிரியர்களாக உருவாக முடியும்.

ஆசிரியர் பணியில் அலட்சியப் போக்கைக் காட்டும் ஆசிரியர்களைப் பற்றி சற்று சிந்தித்துப் பார்த்தோம் என்றால், அவர்கள் ஒரு காலத்தில் அதாவது முன் சேவை ஆசிரியராக இருக்கும்போது, ஆசிரியர் தொழிலை இலட்சியமாக மனதில் பதித்து உழைத்தவர்களாகவே இருக்கின்றனர். குறித்த ஆசிரியர் பணியானது தங்களுக்குக் கிடைத்த பின்னர் தான் தங்கள் தொழிலில் அசமந்தமான போக்கைக் காட்டுகின்றனர். அது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி?

சில ஆசிரியர்களுக்கு மாணவர்களால் பேய் படங்களுக்குரிய பட்டப் பெயர் வைக்கப்படுகின்றது. இவையெல்லாம் தேவையற்ற விடயங்களாக இருந்தாலும், சற்று ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய மிகப்பெரிய பிரச்சினையாகவும் உள்ளது. ஏன்? மாணவர்கள் இவ்வாறான பெயர்களை எல்லாம் ஆசிரியர்களுக்கு வைத்து அழைக்கின்றனர் என்று பார்த்தால், குறித்த சில ஆசிரியர்கள் மாணவர்களுடன் முறையற்ற வகையில் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வதாலும், அதிக தண்டனை வழங்குவதனாலும் இவ்வாறான பெயர்கள் மாணவர்கள் வைக்கின்றனர். இவ்வாறான சில ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் கோட்பாடுகளையும், மாணவர்களின் உளவியல் போன்றவற்றை முறையாகப் படிக்காமல் உருவான ஆசிரியர்களா? அல்லது உளவியல் ரீதியான மனத் தாக்கங்கள் உள்ள ஆசிரியர்களா? சற்றும் புரியவில்லை. எவ்வாறு பார்த்தாலும், ஆசிரியர் தொழிலை இலட்சியமாகக் கொண்டு ஆசிரியர் பணி கிடைத்த பின்னரும் அதில் தீவிர இலட்சியமாகக் கொண்டு பயணிக்கும் ஆசிரியர்களும் சமூகத்தில் காணப்படுகின்றனர். 'கல்விக்கூடம் ஒரு தோட்டம், மாணவர்கள் செடிகள், ஆசிரியர்கள் தோட்டக்காரர்கள்' என்பதை நன்கு நினைவுபடுத்தி தங்கள் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களும் உள்ளனர்.

நமது சமுதாயத்தில் தலை சிறந்த ஆசிரியர்கள் பல உள்ளனர். அவர்கள் பாடசாலையை ஆலயமாகவும் கற்பித்தலை மகத்தான பணியாகவும் மனதில் வைத்து மாணவர்களின் மன நிலைக்கு ஏற்ப அவர்களுக்குக் கற்பித்தலை வழங்கி இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்றுக்கிணங்க ஒவ்வொரு மாணவர்களின் மீதும் தனித்தனி அக்கறை காட்டி தன்னலம் கருதாது காலம் முழுவதும் மாணவர்களின் மனதில் குடிகொள்ளும் அளவிற்குச் சிறப்பான தலைசிறந்த ஆசிரியர்களையும் வாழ்விலோ, அல்லது சமுதாயத்திலோ, கேட்டோ அல்லது பார்த்தோ இருந்திருப்போம்.

இவ்வாறான ஆசிரியர்களை எவராலும் குறை கூற முடியாது. இருப்பினும், இவ்வாறாக ஏன்? அனைத்து ஆசிரியர்களாலும் இருக்க முடியவில்லை என்பதே மனவருத்தமாகவுள்ளது.

நீங்களே சற்று சிந்தனை செய்து பாருங்கள் நம் சமுதாயத்தில் காணப்படும் ஒவ்வொரு ஆசிரியர்களும் தங்கள் பணியில் அக்கறை கொண்டு அலட்சியம் போக்கி, தங்கள் பணியை உயர்வாக எண்ணி, மாணவர்களின் அறிவுக் கடலை எழுச்சி அடைய வைக்க அனைத்து ஆசிரியர்களும் முயன்றால் எவ்வாறு இருக்கும் நம் நாடு, பல படிகள் முன்னேறிச் செல்லும் அல்லவா, எழுத்தறிவினால் ஆசியாவில் முன்னணியில் நிற்கும் இலங்கை நாடு, கல்வி அறிவு திறமையான மாணவர்களைக் கொண்ட நாடாகவும் உலக நாடுகளினால் கண்டறியப்படலாம் அல்லவா, ஆகவே, ஆசிரியர் பணியில் அலட்சியப் போக்கைக் காட்டுகின்ற ஆசிரியராக இருப்பின் சற்று சிந்தியுங்கள். நீங்கள் நினைத்தால் மாணவர் சமுதாயத்தைச் சிறந்த முறையில் எழுச்சியுற வைக்கலாம்.



SVAT ஒழிப்பை அவசரமாக மறுபரிசீலனை செய்யுமாறு

# JAAF வலியுறுத்தல்

எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி (SVAT) முறை ஒழிக்கப்படுவதற்கான காலக்கெடு **1 ஏப்ரல் 2025** அன்று முடிவடையும் நிலையில், இலங்கை ஆடைத் தொழிலின் ஒன்றிணைக்கும் அமைப்பான ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF), தொழில்துறையில் அதிகரித்து வரும் அழுத்தங்களைக் கருத்தில் கொண்டு, இந்த முடிவை அரசு அவசரமாக மறுபரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது.

"உலகளாவிய சந்தையில் ஆடைத் துறை தற்போது கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதன் தாக்கம் ஏற்றுமதி அளவு குறைந்து வருவதில் தெளிவாக தெரிகிறது. இத்தகைய சூழலில், சாத்தியமான மற்றும் திறமையான பணத்தைத் திரும்பப் பெறும் வழிமுறையை முதலில் உருவாக்காமல், SVATஐ நீக்குவது, நாட்டின் மொத்த ஏற்றுமதிப் பட்டியலில் சுமார் பாதி பங்களிப்பைக் கொண்டிருக்கும் ஆடைத் தொழில் உட்பட அனைத்து ஏற்றுமதியாளர்களின் பணப்புழக்கத்தையும் பெரிதும் பாதிக்கும். இந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தவறினால், இந்தத் துறையில் நிதி நெருக்கடியை நிச்சயம் அதிகரிக்கும். மேலும், மிகவும் திறமையான அமைப்புகளிலும், பணம் திரும்பப் பெறும் செயல்முறைகளில் தவிர்க்க முடியாமல் சிக்கிக்கொள்ளும் என்பதால், இலங்கையின் ஏற்றுமதிப் போட்டித்தன்மையை மேலும் பாதிக்கும்" என JAAFஇன் SME துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பந்துல பெர்னாண்டோ தெரிவித்தார்.

"செல்லுபடியாகும் VAT பணத்தைத் திரும்பப் பெறுவதை கணிசமாக விரைவுபடுத்துவதாக" (Significantly speed up valid VAT refunds) அதிகாரிகள் உறுதியளித்திருந்தாலும், பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான நேரத்தில் இதுவரை எந்த அளவிடக்கூடிய முன்னேற்றமும் இல்லை என்று ஆடைத் தொழில் அதன் நிலைப்பாட்டைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. செல்லுபடியாகும் VAT பணத்தைத் திரும்பப் பெறுவதை விரைவுபடுத்துவதில் எந்த உறுதியான முன்னேற்றமும் இல்லாத நிலையில், SVAT திட்டத்தை இரத்துச் செய்வதற்ககான எந்தவொரு முடிவும் விபரீத விளைவை ஏற்படுத்தும், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் (SME) துறைக்கு இது பொருந்தும் என்று பெர்னாண்டோ தெரிவித்தார்.

"SME துறை தற்போது கடுமையாகப் போராடி வருகிறது. SVAT அமைப்பு நீக்கப்பட்டால் SME துறையின் பணப்புழக்கத்தில் பெரும் சுமையாக இருக்கும். **45** நாட்களுக்குள் பணத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று சட்டம் இருந்தபோதிலும், **2010** வரையிலான நிலுவையில் உள்ள VAT பணத்தை ஏற்றுமதியாளர்கள் பெற வேண்டியுள்ளது. மேலும், இந்த தாமதமான பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு எந்த வட்டியும் வழங்கப்படுவதில்லை. அந்த நேரத்தில், இலங்கை ரூபாய் அதன் மொத்த மதிப்பில் **69%** இழந்துள்ளது. இத்தகைய திறமையின்மைகள் SME ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு கடக்க முடியாத தடைகளை உருவாக்கும், பெரிய நிறுவனங்களுக்கும் கூட பணப்புழக்கத்தை கடுமையாக பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், JAAF பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், IMF திட்டத்தின் ஒரு பகுதியாக அரசாங்கத்தின் வருவாய் இலக்குகளை பூர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தை JAAF மற்றும் அதன் உறுப்பினர்கள் அங்கீகரித்து பாராட்டுவதாக வலியுறுத்தினார். இருப்பினும், SVAT திட்டத்தை நீக்குவதற்கான முடிவு துரதிர்ஷ்டவசமாக இரண்டு தவறான அனுமானங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். அதாவது, தற்போதைய அமைப்பு வருவாய் அரிப்பை உருவாக்குகிறது மற்றும் SVAT நீக்கம் அரசின் வருவாய் வசூலை அதிகரிக்கும் என்பதே அந்த அனுமானங்கள்.

"SVAT அமைப்பு, ஆடை உற்பத்திக்கான இடைநிலை பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் முறையான ஆடைத் துறையின் விஷயத்தில் இந்தக் கூற்று உறுதிப்படுத்தப்படவில்லை. தொழில்துறை பின்தங்கிய ஒருங்கிணைப்பு பயணத்தில் உள்ளது. மூலப்பொருட்களின் விநியோகம் இறக்குமதியிலிருந்து உள்ளூர் உற்பத்திக்கு மாறிவிட்டது. SVAT அமைப்பை அகற்றுவது இந்தப் போக்கை மாற்றியமைத்து, அதிக இறக்குமதிகளுக்கு வழிவகுக்கும்" என்றும் லோரன்ஸ் எச்சரித்தார்.

தொழில்துறை நிபுணர்களின் கூற்றுப்படி, SVATஐ இரத்துச் செய்வதன் முதன்மை விளைவு, ஏற்றுமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு வருவாய் துறை (IRD) இடையே அதிகரித்த பணப் புழக்கமாக இருக்கும், வருவாய் அதிகரிப்பு அல்ல. SVATக்கு முன் VAT பணத்தைத் திரும்பப் பெறுவதில் இலங்கையின் வரலாறு குறிப்பிடத்தக்க தாமதங்களால் குறிக்கப்பட்டது. **18** மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள பணத்தைத் திரும்பப் பெறுவதற்காக, ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடிகள் ஏற்பட்டன.

# செலான் வங்கியின் நிலையான வங்கியியல் முயற்சி



செலான் வங்கி அண்மையில் தனது **240**ஆவது செலான் பஹசர நூலகத்தை கொட்டம்பபிட்டிய முஸ்லிம் மத்திய கல்லூரியில் திறந்து வைத்ததன் மூலம் இலங்கைச் சிறுவர்களிடையே வாசிப்பு மற்றும் கற்றல் கலாச்சாரத்தை வளர்ப்பதில் தொடர்ந்தும் கவனம் செலுத்தியுள்ளது. கற்றல் தேவை மற்றும் அபிலாஷைகளை வளர்க்கும் சூழலை உருவாக்கும் முகமாக வளங்கள் அதிகம் தேவைப்படும் பாடசாலைகளில் **2026**ஆம் ஆண்டளவில் **300** செலான் பஹசர நூலகங்களை நிறுவும் வங்கியின் இலக்கை அடைவதில் இது சமீபத்திய படியாகும்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக நடைமுறையிலுள்ள செலான் பஹசர முயற்சியில் கல்வி அமைச்சுடன் செலான் வங்கியின் பகுதி முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து கல்விக்கு உகந்த சூழலை உருவாக்குவதில் உதவி தேவைப்படும் பாடசாலைகளைக் கண்டறிவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில், கொட்டம்பபிட்டிய முஸ்லிம் மத்திய கல்லூரி உதவி தேவைப்படும் பாடசாலைகளில் ஒன்றாக இனங்காணப்பட்டு, செலான் பஹசர முயற்சி ஊடாக நூலகத்திற்கு பரந்த அளவிலான புத்தகங்களுடன் இரண்டு கணினிகள், பல்லூடகப் படவீழ்த்தி மற்றும் அகலத் திரை (wide screen) ஆகியவை உள்ளடங்கலாக அடிப்படை தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்பட்டது. மேலும், வங்கியானது தற்போதைய நூலக உட்கட்டமைப்பை மதிப்பீடு செய்து அதன் தளபாடங்கள், கூரை மற்றும் தரை ஆகியவற்றை மேம்படுத்தியது. இது மாணவர்களுக்கு அறிவை வளர்ப்பதற்கும், அறிவுத்திறனை கூர்மைப்படுத்துவதற்கும் ஊக்கமளிக்கும் சூழலை உருவாக்குகிறது.

செலான் வங்கியின் முதன்மையான நிலைத்தன்மை திட்டத்தின் சமீபத்திய மைல்கல் குறித்து கருத்து தெரிவித்த பிரதான நிதி அதிகாரி சம்பிக்கா தொடன்வெல, "பாரம்பரிய கல்விக் கட்டமைப்பிற்கு அப்பால் அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு தேவையான கருவிகள் மற்றும் சூழலை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், இலங்கைச் சிறார்களின் அபிலாஷைகளில் நாங்கள் முதலீடு செய்கிறோம். வாசிப்பு மற்றும் கற்றல் தேவையை வளர்ப்பது சிறுவர்களை அவர்களின் அதிகபட்ச இலக்கை அடைய தூண்டுவதற்கு மிகவும் முக்கியமானது. இது சமூகத்திலும் நாட்டின் எதிர்காலத்திலும் சாதகமான மாற்றங்களை கொண்டுவரும். செலான் பஹசர மூலம் நாங்கள் அடிமட்டத்தில் தொடங்கி, நாடு முழுவதும் உள்ள சிறுவர்களுக்கு அவர்களின் இலட்சியங்களை அடையத் தேவையான ஆதரவைப் பெறுவதில் சிறந்த அணுகல் இருப்பதை உறுதிசெய்கிறோம் என தெரிவித்தார்.

**240**ஆவது செலான் பஹசர நூலக திறப்பு விழாவில் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஜகத் சந்திரசிறி, செலானின் வடமேற்கு பிராந்தியத்தின் (II) பகுதி முகாமையாளர் உபேந்திர அடிகாரி மற்றும் ஹெட்டிபொல கிளை முகாமையாளர் விஜய் குமார் தளபதி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், பாடசாலை அதிபர் ஜே.எம்.மிஹிலர், நூலகர் எம்.ஐ.ஷிஃப்னா, மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வு வாசிப்பு மற்றும் கற்றலின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் அதேவேளை, பாடசாலை வளாகத்தில் பல மரங்களை நடுவதன் மூலம் இயற்கை வளங்களை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியது.

கற்பவர்கள் உலகைப் பற்றிய விரிவான புரிதலைவளர்க்கக்கூடிய உள்வாங்கப்பட்ட இடங்களாக பௌதீக நூலகங்களின் முக்கியத்துவத்தை செலான் வங்கி தொடர்ந்து அங்கீகரித்து வருகிறது. இந்நம்பிக்கையை பேணும் அதேவேளை, வங்கியானது செலான் பஹசர முன்முயற்சியின் மூலம் பாரம்பரிய நூலகங்களில் எதிர்கால சந்ததியினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் டிஜிட்டல் இடங்களை உருவாக்க உதவுகின்றது. வசதிகளை டிஜிட்டல் மயமாக்குவதிலும் நவீன தொழில்நுட்பத்துடன், நூலகங்களை மேம்படுத்துவதன் மூலம் மாணவர்களின் அறிவுத்திறன் விருத்தியின் பொருட்டு கூட்டுக் கற்றலிற்கு வழிவகுப்பதிலும் சம கவனம் செலுத்தப்படுகிறது.

ஜெருசலேம்

இஸ்ரேலில் ஹிஸ்புல்லா

# வான்வழித் தாக்குதல்

இஸ்ரேலின் வடக்கு பகுதியில் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு ரொக்கெட் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஹிஸ்புல்லா அமைப்பும் பதிலடி கொடுத்துள்ளது. ஹிஸ்புல்லாவின் பதில் தாக்குதலை அடுத்து 48 மணி நேரத்துக்கு இஸ்ரேல் இராணுவ அவசர நிலையை அறிவித்தது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே சண்டை நீடித்து வருகிறது. பலஸ்தீனத்தின் காசா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு ஆதரவு அளித்து வருகிறது.



இதனால், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் முகாம்களை குறிவைத்து அவ்வப்போது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக ஹிஸ்புல்லா அமைப்பினரும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில், தெற்கு லெபனானின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு பதிலடியாகவும் ஹமாஸ் அமைப்பின் தலைவர் சயீத் கொலைக்கு பதிலடி கொடுக்கும் விதமாகவும் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கராச்சி



பாகிஸ்தான் குண்டு வெடிப்பில்

## குழந்தைகள் உட்பட 4 பேர் பலி

பாகிஸ்தானில் சனிக்கிழமை (24) இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பில் 2 குழந்தைகள் உட்பட 4 பேர் பலியாகினர்.

பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியிலுள்ள பலுசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாக அறிவிக்க கோரி ஆயுதம் தாங்கிய தடை செய்யப்பட்ட தெஹ்ரிக்-இ-தாலிபன் பாகிஸ்தான் என்ற அமைப்பு போராடி வருகிறது. பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் நிலைகளை குறி வைத்து தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.


இந்நிலையில். பலுசிஸ்தானின் பிஷின் மாவட்டம் சுர்காப் சவுக் அருகே உள்ள முக்கிய சந்தைப்பகுதியில் இந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் 2 குழந்தைகள், ஒரு பெண் உட்பட 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 14 பேர் உடனே மீட்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வொஷிங்டன்

சுனிதாவுக்காக

## ‘ஸ்பேஸ் எக்ஸை’ நாடும் நாசா



விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், புஜ் வில்மோர் ஆகிய இருவரும் 2025 பெப்ரவரியில் பூமிக்கு திரும்புவர் என அறிவிக்கப்பட்ட நிலையில், பெரும் செல்வந்தரான எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன உதவியுடன் அவர்களை மீட்டுவர நாசா நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோருடன் இணைந்து கடந்த ஜூன் 5ஆம் திகதி விண்வெளிக்கு ஆய்வுக்கு சென்ற நிலையில், சில தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பூமிக்கு திரும்பும் பயணம் ஒத்திவைக்கப்பட்டது. 2025 பெப்ரவரி மாதம் வரை அவர்கள் விண்வெளி நிலையத்திலேயே இருக்க வேண்டியிருக்கும் என நாசா அறிவித்துள்ளது.

இந்நிலையில், க்ரோ-9 (Crew 9) என்ற திட்டத்தின் கீழ், எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செப்டெம்பர் மாதம் 2 பேர் கொண்ட ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் குழு உதவியுடன் அவர்களை பூமிக்கு மீட்டு வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஹாசன்

பணத்துக்காக நாடகமாடிய

## கொலைக்கார தம்பதி

காப்புறுதி பணத்துக்காக, அப்பாவி யாசகரை கொலை செய்து விபத்து என நாடகமாடிய கர்நாடக மாநில தம்பதியை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கர்நாடக மாநிலம், ஹாசன் மாவட்டத்தின், அரசிகெரே தாலுகாவில், கடந்த 12ஆம் திகதி, கார் மீது லொறி மோதி ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

விசாரணையில், கார் முனிசாமி கவுடா என்பவருக்குச் சொந்தமானது என தெரியவந்ததோடு, முனிசாமியின் மனைவி ஷில்பா ராணி என்பவர் விபத்தில் இறந்தது தன் கணவர்தான் என அடையாளம் காண்பித்தார்.

இதற்கிடையே, பிரேதப் பரிசோதனை அறிக்கையில், முனிசாமி கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டது தெரியவந்தது. அதன்பின் விசாரணையைத் தீவிரப் படுத்திய நிலையில், பொலிஸாருக்கு அதிர்ச்சி அளிக்கும் தகவல்கள் கிடைத்தன.

பெங்களூர் ரூரல் மாவட்டம், ஹொஸ்கோட்டின், சிக்ககோலிகா கிராமத்தைச்



சேர்ந்த முனிசாமி கவுடா, கோடிக்கணக்கான ரூபாய்க்கு காப்புறுதி செய்துள்ளார். இவரின் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால், கடன் தொல்லை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், காப்புறுதி பணத்தை எடுத்து கடனை அடைக்க தன் மனைவியுடன் இணைந்து திட்டம் தீட்டியுள்ளார்.

அவரின் முகச்சாயலில் யாசகர் ஒருவரை கண்டுபிடித்து, அவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்து, விபத்தில் இறந்ததாக நாடகமாடியுள்ளனர். இருப்பினும், பிரேதப் பரிசோதனை அறிக்கை கொலையை காட்டிக் கொடுத்து விட்டது.

விசாரணையில், காப்புறுதி பணத்துக்காக தம்பதி நாடகமாடியது தெரியவந்த நிலையில், அவர்களை பொலிஸார் கைது செய்து, வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அயோத்தி

பிரதமர் மோடியை புகழ்ந்ததால்

## விவாகரத்து செய்த கணவர் மீது வழக்கு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை புகழ்ந்ததால் மனைவியை விவாகரத்து செய்த கணவர் மீது உத்தர பிரதேச பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலம் பரெய்ச் நகரைச் சேர்ந்த மரியம் மற்றும் அயோத்தியைச் சேர்ந்த அர்ஷத் ஆகிய இருவருக்கும் கடந்தாண்டு திருமணம் நடந்த நிலையில், அர்ஷத் தனது மனைவியை விவாகரத்து செய்துள்ளார்.

இது தொடர்பாக மரியம் தெரிவிக்கையில், “திருமணத்துக்குப் பிறகு அயோத்தியில் உள்ள கணவரின் வீட்டுக்குச் சென்றேன். அப்போது, என் கணவர் முன்பு முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் பிரதமர் நரேந்திர மோடியை புகழ்ந்து பேசியதால், கோபமடைந்த என் கணவர், என்னை விவாகரத்து செய்துவிட்டு, அடித்து துன்புறுத்தினார். கணவரின் தாய், தங்கை மற்றும் சகோதரர்கள் என அனைவரும் என் கழுத்தை நெரிக்க முயன்றனர். இதுகுறித்து பரெய்ச் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளேன்” என்றார்.

இந்நிலையில், மரியம் கொடுத்த புகாரின் பேரில் பொலிஸார் அர்ஷத் உட்பட அவரது குடும்பத்தினர் 8 பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

முதலாவது டெஸ்டில்

# இலங்கையை வென்ற இங்கிலாந்து



இலங்கைக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், ஓல்ட் ட்ரஃபோர்ட்டில் புதன்கிழமை (21) ஆரம்பித்து சனிக்கிழமை (24) முடிவுக்கு வந்த முதலாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 236/10 (துடுப்பாட்டம்: தனஞ்சய டி சில்வா 74, மிலான் ரத்னாயக்க 72, குசல் மென்டிஸ் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 3/32, ஷொய்ப் பஷிர் 3/55, குஸ் அட்கின்ஸன் 2/48, மார்க் வூட் 1/31)

இங்கிலாந்து: 358/10 (துடுப்பாட்டம்: ஜேமி ஸ்மித் 111, ஹரி ப்ரூக் 56, ஜோ றூட் 42, டான் லோரன்ஸ் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 4/103, பிரபாத் ஜெயசூரிய 3/85, விஷ்வ பெர்ணாண்டோ 2/73, மிலான் ரத்னாயக்க 1/66)

இலங்கை: 326/10 (துடுப்பாட்டம்: கமிந்து மென்டிஸ் 113, தினேஷ் சந்திமால் 79, அஞ்சலோ மத்தியூஸ் 65, திமுத் கருணாரத்ன 27 ஓட்டங்கள். பந்துவீச்சு: மத்தியூ பொட்ஸ் 3/47, கிறிஸ் வோக்ஸ் 3/58, குஸ் அட்கின்ஸன் 2/89, ஜோ றூட் 1/5, மார்க் வூட் 1/36)

இங்கிலாந்து: 205/5 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 62, ஜேமி ஸ்மித் 39, டான் லோரன்ஸ் 34, ஹரி ப்ரூக் 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 2/25, பிரபாத் ஜெயசூரிய 2/98, மிலான் ரத்னாயக்க 1/31)

போட்டியின் நாயகன்: ஜேமி ஸ்மித்

**“ மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், ஓல்ட் ட்ரஃபோர்ட்டில் புதன்கிழமை[21] ஆரம்பித்து சனிக்கிழமை[24] முடிவுக்கு வந்த முதலாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது**



ஜெயாபார்ம் வெற்றிக் கிண்ணத் தொடர்:

## அரையிறுதியில் லிவர்பூல்

■ எம்.யூ.எம்.சனூன்

புத்தளத்தில், புத்தளம் கால்பந்தாட்ட லீக் தொடராக நடத்தி வருகின்ற கால்பந்தாட்டத் தொடரான ஜெயாபார்ம் வெற்றிக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு லிவர்பூல் அணி தகுதி பெற்றுள்ளது.

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் சனிக்கிழமை (24) நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கற்பிட்டி பேர்ள்ஸ் அணியை வென்றே அரையிறுதிப் போட்டிக்கு லிவர்பூல் தகுதி பெற்றது.

இப்போட்டியானது வழமையான நேர முடிவில் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. லிவர்பூல் சார்பாக, எம்.எம்.முஸக்கிர் இரண்டு கோல்களையும், எம்.என்.எம்.ஆஷிக் ஒரு கோலையும் பெற்றனர். பேர்ள்ஸ் அணி சார்பாக எம்.எப்.எம்.அஹாதிர் இரண்டு கோல்களையும், எம்.எச்.ரிஜ்வான் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

வெற்றியைத் தீர்மானிப்பதற்காக இடம்பெற்ற பெனால்டியில் லிவர்பூல் 3-1 என்ற ரீதியில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.









## கிராமப்புற பாடசாலைகள் பிரகாசிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹிம்

மத்திய மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான எறிபந்து போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது, 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில், கொத்மலை காமினி திஸாநாயக மத்திய மகா வித்தியாலயமும், 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் கலேவெல அல் புர்ஹான் மத்திய மகா வித்தியாலயமும், 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் ஸ்ரீநாக மத்திய கல்லூரியும், 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் கோண்கஹவெல மத்திய மகா வித்தியாலயமும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

முதல் தடவையாக

## பாகிஸ்தானை வென்றது பங்களாதேஷ்

முதல் தடவையாக டெஸ்ட் போட்டியொன்றில் பாகிஸ்தானை பங்களாதேஷ் வென்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில், ராவல்பின்டியில் புதன்கிழமை (21) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (25) முடிவுக்கு வந்த முதலாவது போட்டியை வென்றமையையடுத்தே பாகிஸ்தானுக்கெதிராக தமது முதலாவது வெற்றியை டெஸ்டில் பாகிஸ்தான் பதிவு செய்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பாகிஸ்தான், மொஹமட் றிஸ்வானின் ஆட்டமிழக்காத 171, சௌட் ஷகீலின் 141, சைம் அயூப்பின் 56 ஓட்டங்களோடு 6 விக்கெட்டுகளை இழந்து 448 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. பந்துவீச்சில், ஹஸன் மஹ்மூட், ஷொரிஃபுல் இஸ்லாம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, மெஹிடி ஹஸன் மிராஸ் மற்றும் ஷகிப் அல் ஹஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், முஷ்பிக்கூர் ரஹீமின் 191, மெஹிடி ஹஸன் மிராஸின் 77, லிட்டன் தாஸின் 56, மொமினுல் ஹக்கின் 50 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 565 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், நசீம் ஷா 3, ஷகீன் ஷா அஃப்ரிடி, குராம் ஷஷாட், மொஹமட் அலி ஆகியோர் தலா 2, சைம் அயூப் ஆகியோர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், ஷொரிஃபுல் இஸ்லாம், ஹஸன் மஹ்மூட், நஹிட் ரானா, ஷகிப் அல் ஹஸன் (3), மெஹிடி ஹஸன் மிராஸிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் றிஸ்வான் 51, அப்துல்லா ஷஃபிக் 37 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 30 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது. ஸகிர் ஹஸன் ஆட்டமிழக்காமல் 15, ஷட்மன் இஸ்லாம் ஆட்டமிழக்காமல் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றவாறு காணப்பட்டனர்.

இப்போட்டியின் நாயகனாக ரஹீம் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 26 ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.